## கூட்டுறவு தணிக்கை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை, சென்னை–35.

முன்னிலை:– திரு.க.மணிவாசகன், எம்.ஏ., பி.எட்.,
கூட்டுறவு தணிக்கை இயக்குநர்.

***********

ந.க.எண். 4184 / 2020 / அபஅ.2 நாள்.12.10.2020.

பொருள் : பணிக்குழு – நேரடி நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு IV- (தொகுதி -IV) 2018–2019 மற்றும் 2019–2020 அடங்கிய இளநிலை உதவியாளர் பதவி– தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரடி இளநிலை உதவியாளர் தெரிவுப் பட்டியல் – பணி ஒதுக்கீடு ஆணை – பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை :
1. அரசாணை எண்.527 மற்றும் 528, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்.26.05.1981.
2. அரசாணை எண்.34, பொது (பணிகள் ஆர்) துறை, நாள்.12.01.1983.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.2358/PSD-I/2020, நாள்.28.05.2020.

************

ஆணை:–

பார்வை 3–ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெற்ற ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு IV- (தொகுதி–IV)–ல் 2018–2019 மற்றும் 2019–2020 ஆண்டுகளுக்கான எழுத்துத் தேர்வின் மூலம் நேரடி இளநிலை உதவியாளராகத் கூட்டுறவு தணிக்கைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வரிசை எண். 18–ல் உள்ள திரு. எஸ்.அமல்ராஜ்–க்கு கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர், விருதுநகர் அலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பதவிக்கு முற்றிலும் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்யும் பொருட்டு ஒதுக்கீடு செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

2. இவருக்கு பணி நியமன ஆணை கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர், விருதுநகர் அவர்களால் தனியே பிறப்பிக்கப்படும்.

3. இந்த நியமனம் முற்றிலும் தற்காலிகமானது எனவும், இவரது பணிவரன்முறை மேன்மையுள்ள சென்னை / மதுரை உயர்நீதிமன்றங்களின் அமர்வில் நிலுவையுள்ள வழக்குகளின் நீதிப்பேராணை தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடனும் வழங்கப்படுகிறது.

4. தேர்வாணையத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நபர் அளித்துள்ள விவரங்கள் தவறானவையென பின்னர் தெரியவந்தால், இவரது பணி நியமனம் உடனடியாக ரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

...2

Scanned with CamScanner

5. பணியிட நியமனம் வழங்கி கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர், விருதுநகர் ஆணை பிறப்பிக்கப்படும் நாளிலிருந்து 15 நாட்களுக்குள் பணியில் சேர வேண்டும் எனவும், பணிசேர் காலம் குறித்து, எவ்வித மனுவும் ஏற்கப்பட மாட்டாது எனவும், குறிப்பிட்ட காலவரையறைக்குள் பணியில் சேராவிடின் இவர்களது பெயர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையப் பட்டியலிலிருந்து நீக்க பரிந்துரை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

6. இவர் பணியில் சேரும் நாள் முதல் தமிழ்நாடு திருத்திய ஊதிய நிர்ணய விதிகள் 2017–ன் கீழ் ரூ.19,500–62,000 (நிலை–08) என்ற ஊதிய விகிதத்தில் ஊதியம் பெறத் தகுதியுடையவர் ஆவார். இப்பணி தற்காலிகமானது எனவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் முதல், தொடர்ச்சியாக 3 ஆண்டு காலத்திற்குள் 2 ஆண்டுகள் பணிக்காலத்தில் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டுமென அறிவிக்க வேண்டும். தகுதிகாண் பருவ காலத்தில் அந்த இளநிலை உதவியாளர் பணியில் அல்லது நடத்தையில் அதிருப்தி ஏற்பட்டால் எந்த நேரத்திலும் அவர்கள் பணியிலிருந்து நீக்கப்படலாம் என்று நியமன ஆணையில் தெரிவிக்கப்பட வேண்டும். இவர் தகுதிகாண் பருவ காலத்தில் நிறைவு செய்ய வேண்டிய பவானிசாகர் அடிப்படை பயிற்சி மற்றும் துறைத் தேர்வுகள் குறித்து நியமன ஆணையில் தெரிவிக்கப்பட வேண்டும்.

7. இவர் பள்ளி இறுதித் தேர்வில் தமிழை ஒரு பாடமாக படித்துள்ளனரா என்பதை உறுதி செய்து கொள்ள கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர், விருதுநகர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அவ்வாறு தமிழ்மொழி தேர்ச்சி பெறாதவர் பணியில் சேர்ந்த இரண்டு ஆண்டுகளுக்குள் இரண்டாம் நிலை தமிழ் தேர்வில் (2nd Class Language (full) Test) தேர்ச்சி பெற வேண்டும் எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

8. பார்வை 3–இல் காணும் தேர்வாணைய கடிதத்துடன் பெறப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண்களுக்கும் முதுநிலைக்கும் தொடர்பில்லை. தேர்வாணையத்திடமிருந்து இவரது முதுநிலை குறித்து பட்டியல் பெறப்பட்ட பின்னரே இவரது முதுநிலை விவரம் நிர்ணயிக்கப்படும். இது தொடர்பாக இவரது பணிநியமன ஆணையில் தெரிவிக்கவும், பின்னர் இவர் பணியில் சேர்ந்த பின் அவர்களது பணிப்பதிவேட்டில் இது தொடர்பாக உரிய பதிவுகள் மேற்கொள்ளவும் கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர், விருதுநகர் கோரப்படுகிறார்.

9. இவருக்கு உடன் பணி நியமன ஆணை பிறப்பித்து அதனை பதிவஞ்சல் / ஒப்புகை அட்டையுடன் அனுப்பி வைக்குமாறும், பார்வை 1&2–இல் கண்ட அரசாணைகளின்படி பணியாளர் உடல் தகுதியுடையவராக இருக்கிறாரா என்பதற்கான உடற்தகுதி சான்றிதழைப் பெற்று உடற்தகுதி குறித்து திருப்தியடைந்த பின்னர் பணியில் சேர அனுமதிக்குமாறும், மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தவரை மாவட்ட மருத்துவக் குழுவிடமிருந்து தகுந்த சான்றினைப் பெற்று பணியில் சேர அனுமதிக்குமாறும், தெரிவிக்கப்படுகிறது இவர் பணியில் சேர்ந்தவுடன், இவரது வேலை வாய்ப்பக பதிவு அட்டையை பெற்று அதனை சம்பந்தப்பட்ட வேலை வாய்ப்பகத்திற்கு சரண் செய்திடவும் கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர், விருதுநகர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

10. பார்வை 3–ல் காணும் தேர்வாணையக் கடிதம் நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. அதில் தெரிவிக்கப்பட்ட அனைத்து நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகளை பின்பற்றுமாறு கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர், விருதுநகர் கோரப்படுகிறார்.

11. மேற்படி நபர் பணியில் சேர்ந்ததும் பணிசேர் அறிக்கையினை இயக்ககத்திற்கு தவறாது! அனுப்பி வைக்கவும் கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர், விருதுநகர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

...3

Scanned with CamScanner

12. இக்கடிதத்தை இணைப்புகளுடன் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் வழங்க வேண்டும்.

இயக்குநர்

பெறுநர்:

திரு. எஸ்.அமல்ராஜ்,
எண்.175, தெற்கு தெரு,
ஜெயலட்சுமி நகர்,
அருப்புக்கோட்டை
விருதுநகர் மாவட்டம் – 626 101
(Ex-service man)
(பதிவஞ்சலில் / ஒப்புகை அட்டையுடன்).

நகல்:

1. கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர், விருதுநகர்.
   பார்வை 3–இல் காணும் கடித நகல் மற்றும் அதனுடன் பெறப்பட்ட தனியர்களின் புகைப்படங்களுடன்.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–600 003.
3. இயக்கக அனைத்து பிரிவுகள்.
4. இருப்புக் கோப்பு.

Scanned with CamScanner

- 37 -

அ.ப.அ.2 பிரிவிற்கு

# கூட்டுறவு தணிக்கைத் துறை

அனுப்புநர்
திரு. நெ.பாலன்.எம்.ஏ.டி.சி.ஏ
கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்,
விருதுநகர்.

பெறுநர்
கூட்டுறவு தணிக்கை இயக்குநர்,
சென்னை-35.

ந.க.எண்3124/2020/ப.தொ. நாள்-16.10.2020

திருவள்ளுவர் ஆண்டு-2051 சார்வரி வருடம், புரட்டாசி-30

பொருள்- பணிக்குழு- - நேரடி நியமனம் — தமிழ்நாடு அமைச்சுப்பணி- தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் 2018-2019 மற்றும் 2019-2020 ல் அடங்கிய தொகுதி-IV தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு நியமன ஆணை வழங்கப்பட்டது- பணியில் சேர்ந்த விவரத்தினை தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை-1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண். 2358/PSD-I/ 2020, நாள்- 28.05.2020

2. கூட்டுறவு தணிக்கை இயக்குநர் சென்னை கடிதம் அவர்களின் ந.க.எண் 4184/2020அ.ப.அ2 நாள்-12.10.2020

3. கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் விருதுநகர் செயல் முறை ஆணை- ந.க.எண் 3124/2020 ப.தொ நாள்- 16.10.2020

*******

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2018-2019 மற்றும் 2019-2020 ஆண்டுகளுக்கான தொகுதி IV க்கான எழுத்துத்தேர்வின் மூலம் நேரடியாக நியமனம் செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் கூட்டுறவு தணிக்கை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி விருதுநகர் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட கீழ்க்காணும் இளநிலை உதவியாளர்கள் பார்வை 3ல் காணும் விருதுநகர் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி விருதுநகர் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் அலுவலத்தில் காலியாக உள்ள கீழ்க்காணும் பணியிடங்களில் பணியில் சேர்ந்துள்ளார்கள் என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

| வ.எண் | பெயர்/பதவி | பணியிடம் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|
| 1 | மா.வினோத்குமார்<br>இளநிலை உதவியாளர் | த.வி.பிரிவு | 16.10.2020 முற்பகல் |
| 2 | எஸ்.அமல்ராஜ்<br>இளநிலை உதவியாளர் | ப.ப.பிரிவு | 16.10.2020 முற்பகல் |

அனுப்பப்பட்டது
16/10/20
எழுத்தர்

16.10.20

கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்
விருதுநகர்
16/10/20

**நகல்**

கூட்டுறவு தணிக்கை கூடுதல் இயக்குநர் திருநெல்வேலி மண்டலம் திருநெல்வேலி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned with CamScanner

| (1) | (2) | (3) | (4) | (5) |
| --- | --- | --- | --- | --- |

ந.க.எண் 3124/2020/ப.தொ

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு (தொகுதி IV) 2018-2019 மற்றும் 2019-2020 மூலம் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடிதம் எண் 2358/PSD 01/2020 நாள் 28.05.2020 ன் படி கூட்டுறவு தணிக்கைத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு கூட்டுறவு தணிக்கை இயக்குநரின் செயல்முறை ஆணை ந.க எண் 4184/2020 அப அ.2 நாள் 12.10.2020 ன் படி விருதுநகர் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர் அலுவலக கட்டுப்பாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப் பட்ட இவர் விருதுநகர் கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநரின் செயல் முறை ஆணை ந.க எண் 3124/2020 ப.தொ(2) நாள் 16.10.20 ன் படி இவ்வலுவலக கட்டுப்பாட்டில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் தற்காலிகமாக பணியமர்த்தம் செய்யப்பட்டார்.

இவரது ஊதியம் இவர் பணியில் சேர்ந்த நாளான 16.10.2020 முற்பகல் முதல் தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் 2017ன் கீழ் ரூ 19500 – 62000 (நிலை -08) என்ற ஊதிய விகிதத்தில் அமையும்.

இவர் பணியில் சேர்ந்த நாள் முதல் தொடர்ச்சியாக மூன்று ஆண்டு காலத்திற்குள் இரண்டு ஆண்டுகள் பணிக்காலத்தில் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும்.

இளநிலை உதவியாளர் பதவியில் இவரது முதுநிலை குறித்து தேர்வாணையத்திடமிருந்து முதுநிலை பட்டியல் பெறப்பட்ட பின்னர் முதுநிலை விவரம் நிர்ணயிக்கப்படும்.

16.10.2020 முற்பகல் பணியில் சேர்ந்தார்.

15.12.20

கூட்டுறவு தணிக்கை உதவி இயக்குநர்
விருதுநகர்.

15.12.20

15/12/20

Scanned with CamScanner